# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 7 | தமிழ் | நேரம் -2 மணித்தியாலங்கள்

### பகுதி– 1

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.

1) உடல் 2) சரீரம் 3) இழை 4) யாக்கை

2) "பிறரை ஏளனம் செய்வது தவறு" ஏளனம் என்பதன் ஒத்தசொல்.

1) இகழ்ச்சி 2) ஏழ்மை 3) பெருமை 4) வலிமை

3) "பிற உயிர்கள் மேல் .................. உடையவர்களாக வாழுதல் நன்று" இடைவெளிக்குப் பொருத்தமான இணைமொழிச் சொல்.

1) ஆதி அந்தம் 2) ஈவிரக்கம் 3) கண்ணீரும் கம்பலையும் 4) உயர்வு தாழ்வு

4) இல்லையென்று கூறாது வாரி வழங்குபவன்.

1) அகதி 2) சுயநலவாதி 3) அட்டவதானி 4) வள்ளல்

5) வாக்கியம் ஒன்றின் உறுப்பு அல்லாதது.

1) எழுவாய் 2) குறிப்புவினை 3) பயனிலை 4) செயப்படுபொருள்

6) "மாலா வண்ண மாம்பழத்தை மகிழ்வுடன் உண்டாள்" இவ்வாக்கியத்திலுள்ள பயனிலை அடைமொழி.

1) மாலா 2) வண்ண 3) மாம்பழம் 4) மகிழ்வுடன்

7) பெண்கள் தேயிலைக் கொழுந்து பறித்தனர். இவ்வாக்கியத்தின் எழுவாய்.

1) பெண்கள் 2) தேயிலை 3) பறித்தனர் 4) கொழுந்து

8) தமிழிலுள்ள உயிர் மெய் எழுத்துக்கள்.

1) 12 2) 18 3) 247 4) 216

9) கிரந்த எழுத்துக் கூட்டமாக அமைவது.

1) ஜ, ப் , ஷ 2) ஹ , ஸ்ரீ , க 3) ஸ , ஜ , ஹ 4) த , ஸ , ஜ

10) உறவு முறைக் கடிதமொன்றின் உறுப்பு அல்லாதது.

1) முகவரி 2) உள்முகவரி 3) விளிப்பு 4) முடிப்பு

11) தலைவன் - தலைவி அது போல தபுதாரன்.

1) மனைவி 2) தபுத்தி 3) விதவை 4) குணத்தி

12) களிறு பிடி அது போல கலை.

1) பிணை 2) நாகு 3) பசு 4) பேடு

13) "கடல் , சக்கரம் , மோதிரம்" ஆகிய பல பொருளுக்கான ஒரு சொல்.

1) ஆறு 2) ஆழி 3) கணை 4) சாகரம்

14) "ஓடும் புளியம் பழமும் போல...." எனும் உவமைத்தொடரின் பொருள்.

1) மனக்கலக்கம்
2) துன்பத்தில் அபயம்
3) ஒட்டுறவின்றி இணைந்திருத்தல்
4) நெருக்கமான நட்பு

15) "மனக்கலக்கம் அடைதல்" எனும் பொருள் தரும் உவமைத்தொடர்.

1) கடன்பட்டார் நெஞ்சம் போல 2) வாடும் பயிருக்கு வான்மழை போல
3) புதையல் காத்த பூதம் போல 4) சிவபூசையில் கரடி புகுந்தது போல

16) பின்வருவனவற்றில் இரட்டைக்கிளவி.

1) குடுகுடு 2) அருமைபெருமை 3) விருப்புவெறுப்பு 4) ஒழிப்புமறைப்பு

17) மாடு புல் மேய்ந்தது இங்கு மாடு என்பது.

1) ஆண்பால் 2) பெண்பால் 3) பலவின்பால் 4) ஒன்றன்பால்

18) பின்வருவனவற்றுள் படர்க்கைச் சொல் எது.

1) நான் 2) நீங்கள் 3) அவள் 4) நாம்

19) நான் , நீ , அவன் , யார் என்பன.

1) மாற்றுப்பெயர் 2) கூட்டுப்பெயர் 3) ஆக்கப்பெயர் 4) தொழிற்பெயர்

20) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமைவது.

1) வானொலி 2) நீர்வீழ்ச்சி 3) வந்தவள் 4) முதலாளி

# பகுதி - II

01) பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக.

பட்டுச்சட்டைக் காரன் - ஒரு
பாம்பாட்டி வந்தான்
பெட்டியைத் திறந்தான் - அவன்
பெரிய மகுடி எடுத்தான்
பட்டு மாட்டுத் தாம்பு - தான்
படமெடுத்தது பாம்பு
எட்டிக்காசு கொடுத்தேன் - பாம்பை
பெட்டிக்குள்ளே அடைத்தான்

(புரட்சிக்கவிஞன்)

1) பாம்பாட்டி எப்படியான சட்டை அணிந்திருந்தான்?
2) பாம்பாட்டி ஏன் மகுடியை எடுத்தான்?
3) பணம் ஏன் எட்டிக் கொடுக்கப்பட்டது?
4) காசு கொடுத்ததும் பாம்பாட்டி என்ன செய்தான்?
5) "பெரிய மகுடி எடுத்தான்" இங்கு மகுடி என்றால் என்ன?

(2 x 5 = 10 புள்ளிகள்)

02) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை வரைக.

I) வாய்மையே வெல்லும்
II) மரம் வளர்ப்போம் பயன் பெறுவோம்
III) கடமையே கண்
IV) தொலைபேசியும் மாணவர் கல்வியும்

(20 புள்ளிகள்)

03) உமது பாடசாலையில் ஆறாந்தரம் படிக்கும் போது ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துக்காட்டி உமது நண்பன் அல்லது நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

04) பின்வரும் சொற்களின் பொருள் தருக.

1. நிருமலமான - (பரிசுத்தமான)
2. ஆகாரம் - (உணவு)
3. சினம் - (கோபம்)
4. காந்தள் - (கார்த்திகைப்பூ)
5. தாம்பூலம் - (வெற்றிலை , பாக்கு)

(5 x 1 = 5 புள்ளிகள்)

05) பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. ஆல் - ____________________

   ஆள் - ____________________

   ஆழ் - ____________________

2. பனி - ____________________

   பணி - ____________________

3. பரவை - ____________________

   பறவை - ____________________

4. கலி - ____________________

   களி - ____________________

   கழி - ____________________

(10 x 1 1/2 = 15 புள்ளிகள்)

06) சுருக்கமான விடை தருக.

1. “அந்தரே கல்யாண வீட்டில் மாடு மாதிரி வாய் திறக்காமல் மிக அமைதியாக இருக்க வேண்டும்.” இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
2. “ஆறு” எனும் பாடலின் ஆசிரியர் யார்?
3. மனிதனுக்குள்ள தலையாய கடமை என்ன?
4. கவிஞர் அழகசுந்தரதேசிகர் எழுதிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. தமிழ்த் தட்டச்சின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
6. செந்தமிழ் போற்றிய சேரன் எனும் கட்டுரையில் வரும் மும்முரசங்களும் எவை?
7. புத்தியில்லாதவன் என்பதன் இரு பொருள்களும் எவை?
8. “உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்பதன் பொருள் யாது?
9. எதிர்கொண்டு அழைத்து உபசாரம் செய்தல் என்றால் என்ன?
10. கட்டுச்சோறு என்பதனால் கருதப்படுவது யாது?

(10 x 2 = 20 புள்ளிகள்)